தேசிய தொழில்முனைவோர் அபிவிருத்தித் திட்டம்

விண்ணப்பப் படிவம் 2026/27

ஜனசக்தி குழுமம் (JXG), இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் (CCC) இணைந்து

திட்டம் பற்றிய அறிமுகம்

தேசிய தொழில்முனைவோர் அபிவிருத்தித் திட்டமானது, இலங்கை முழுவதும் புத்தாக்கம் மிக்க, விரிவாக்கத் திறன் கொண்ட மற்றும் நிலையான வணிகங்களை அடையாளம் கண்டு, நிதி உதவி, வழிகாட்டல் மற்றும் வணிகத் திறன் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் அவற்றுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இத்திட்டமானது கட்டமைக்கப்பட்ட தெரிவுச் செயல்முறையைப் பின்பற்றும். இதன் மூலம் தகுதியுடைய 100 விண்ணப்பதாரர்கள் அடையாளம் காணப்பட்டு, 30 தொழில்முனைவோர்/வணிக நிறுவனங்கள் குறுகிய பட்டியலுக்குத் தெரிவு செய்யப்படும். பின்னர், பலகட்ட மதிப்பீடு மற்றும் இறுதிக் கருத்துத் திட்ட முன்வைப்பு (Pitching) செயல்முறையின் மூலம் 20 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு, அவர்களின் வணிக வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஆதரிக்கும் வகையில், இலங்கை ரூபாய் 1 மில்லியன் முதல் 5 மில்லியன் வரை நிதி உதவியும், அதனுடன் கட்டமைக்கப்பட்ட 12 மாத வழிகாட்டல் மற்றும் கண்காணிப்புத் திட்டமும் வழங்கப்படும்.

விண்ணப்ப வழிகாட்டுதல்கள்

இந்த விண்ணப்பத்தை எவ்வாறு பூர்த்தி செய்வது

ஒவ்வொரு கேள்விக்கும் தெளிவாகப் பதிலளிக்கவும். சாத்தியமான இடங்களில் குறிப்பிட்ட உதாரணங்கள், புள்ளிவிவரங்கள் மற்றும் ஆதாரங்களைப் பயன்படுத்தவும். உங்கள் விண்ணப்பதாரர் பிரிவுக்குப் பொருந்தும் பகுதியை மட்டும் பூர்த்தி செய்யவும். குறிப்பிடப்பட்டுள்ள சொல் வரம்புகளுக்குள் பதில்களை வழங்கவும். விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தேவையான ஆதார ஆவணங்களைத் தயாராக வைத்திருக்கவும்.

விண்ணப்பச் செயல்முறையின் படிநிலைகள்

1. உங்கள் தகுதியைச் சரிபார்த்து, பொருத்தமான ஒரு பிரிவைத் தெரிவு செய்யவும்.
2. விண்ணப்பதாரர் மற்றும் வணிகம் தொடர்பான விபரங்களைப் பதிவு செய்யவும்.
3. உங்கள் விண்ணப்பப் பிரிவுக்குப் பொருந்தும் கேள்விகளைப் பூர்த்தி செய்யவும்.
4. உங்கள் புத்தாக்கம், வளர்ச்சித் திட்டம், தாக்கம் மற்றும் தேவையான நிதி உதவி பற்றிய விபரங்களை விளக்கவும்.
5. ஆதார ஆவணங்களைப் (Supporting Documents) பதிவேற்றம் செய்து, உறுதிமொழிப் பகுதியைச் சரிபார்த்து, விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.

1. தகுதி மற்றும் விண்ணப்பதாரர் பிரிவு

1.1 உங்கள் விண்ணப்பதாரர் பிரிவைத் தெரிவு செய்யவும்

ஒரு விண்ணப்பதாரர் பிரிவை மட்டும் தெரிவு செய்யவும். தெரிவு செய்வதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதித் தேவைகளைப் படிக்கவும்.

- **வளர்ந்து வரும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (EMERGING SME)**
  ஏற்கனவே நிறுவப்பட்ட வணிகச் செயற்பாடுகளைக் கொண்டிருப்பதுடன், புத்தாக்கம், வணிக விரிவாக்கம் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றுக்கான சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தும் வணிக நிறுவனங்கள்.

  தகுதித் தேவைகள்:

  - குறைந்தபட்சம் **மூன்று (3) ஆண்டுகள்** வணிகச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
  - **தணிக்கை செய்யப்பட்ட (Audited) நிதிக் கணக்குகள்** மற்றும்/அல்லது **வருமான வரி அறிக்கைகளைச் சமர்ப்பித்ததற்கான பதிவுகள்** மூலம் வணிகச் செயற்பாட்டு வரலாற்றை நிரூபிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.
  - வருடாந்த விற்பனை புரள்வு (Annual turnover) **இலங்கை ரூபாய் 25 மில்லியன் முதல் 500 மில்லியன் வரை** இருக்க வேண்டும்.

இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை புரள்வு (வரம்பானது **உற்பத்தி மற்றும் சேவைத் துறை** ஆகிய இரு வகையான வணிக நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

- **தொடக்கநிலை வணிகங்கள் (STARTUP)**

மூன்று ஆண்டுகள் முழுமையாகச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்க வேண்டிய அவசியமில்லாத, ஆரம்பநிலையிலுள்ள வணிகங்கள். எனினும், தங்களது வணிக யோசனைக்கான சாத்தியக்கூறுகள், தமது தயாரிப்பு அல்லது சேவைக்கான சந்தைத் தேவை மற்றும் வணிகத்தை விரிவாக்குவதற்கான வாய்ப்புகள் ஆகியவற்றை நிரூபிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

தகுதித் தேவைகள்:

- பரிசோதிக்கப்பட்ட வணிக யோசனை அல்லது ஆரம்பநிலையில் உருவாக்கப்பட்ட தயாரிப்பு அல்லது சேவையின் மாதிரி இருக்க வேண்டும் (**கருத்தாக்கச் சாத்தியக்கூறு நிரூபணம் – Proof of Concept (PoC) அல்லது குறைந்தபட்சம் பயன்படுத்தக்கூடிய தயாரிப்பு – Minimum Viable Product (MVP)**).
- **சந்தை அங்கீகாரம், வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் ஈடுபாடு, முன்னோடிச் செயற்படுத்தல் அல்லது வணிகச் சாத்தியக்கூறுகள்** தொடர்பான ஆதாரங்கள் இருக்க வேண்டும்.
- **விரிவாக்கக்கூடிய மற்றும் நிலையான வணிக மாதிரி** கொண்டிருக்க வேண்டும்.
- இதற்கு முன்னர் இதேபோன்ற தொடக்கநிலை வணிக அல்லது தொழில்முனைவோர் போட்டிகளில் பங்கேற்ற விண்ணப்பதாரர்களும் தகுதியுடையவர்கள். இருப்பினும், அத்தகைய போட்டிகளில் அவர்கள் வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டிருக்கக்கூடாது.

1.2 தகுதி உறுதிப்படுத்தல்

தெரிவு செய்துள்ள பிரிவுக்கான தகுதித் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்தவும்.

- மேலே தெரிவு செய்துள்ள பிரிவுக்கான தகுதித் தேவைகளை நான் பூர்த்தி செய்கிறேன் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.
- நான் வழங்கிய தகவல்கள் தகுதி சரிபார்ப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயல்முறையின் ஒரு பகுதியாகச் சரிபார்க்கப்படலாம் என்பதைப் புரிந்துகொள்கிறேன்.

02 | விண்ணப்பதாரர் விவரங்கள்

2.1 விண்ணப்பதாரர் / நிறுவனர் விவரங்கள்

- **முழுப் பெயர்:** [சுருக்கமான பதில்]
- **வணிக நிறுவனத்தில் வகிக்கும் பதவி / பொறுப்பு:** [சுருக்கமான பதில்]
- **மின்னஞ்சல் முகவரி:** [மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும்]
- **கைபேசி இலக்கம்:** [கைபேசி இலக்கத்தை உள்ளிடவும்]

2.2 நிறுவனர் / வணிக உரிமையாளர் பற்றிய தகவல்கள்

நிறுவனர்(கள்) / ஊக்குவிப்பாளர்(கள்) பற்றிய விபரங்களை வழங்கவும்.

பெயர்	பங்கு / பொறுப்பு	உரிமைப் பங்கு (%)	தொழில்முனைவோர் அனுபவம் (ஆண்டுகள்)	முக்கிய நிபுணத்துவம்

03 வணிக நிறுவனத்தின் விவரங்கள்

3.1 வணிகம் தொடர்பான தகவல்கள்

பதிவுசெய்யப்பட்ட வணிக நிறுவனத்தின் பெயர் :

வணிகப் பெயர் / வர்த்தகப் பெயர் (Brand Name) :

வணிகப் பதிவிலக்கம் :

வணிகம் பதிவு செய்யப்பட்ட திகதி :

வணிக முகவரி :]

மாகாணம்:

- மத்திய மாகாணம்
- வடக்கு மாகாணம்
- தென் மாகாணம்
- கிழக்கு மாகாணம்
- வடமேல் மாகாணம்
- ஊவா மாகாணம்
- வடமத்திய மாகாணம்
- சபரகமுவ மாகாணம்
- மேல் மாகாணம்

மாவட்டம்:

- அம்பாறை
- அனுராதபுரம்
- பதுளை
- மட்டக்களப்பு
- கொழும்பு
- காலி
- கம்பஹா
- அம்பாந்தோட்டை
- யாழ்ப்பாணம்
- களுத்துறை

- கண்டி கேகாலை கிளிநொச்சி குருநாகல் மன்னார்
- மாத்தளை மாத்தறை மொனராகலை முல்லைத்தீவு நுவரெலியா
- புத்தளம் இரத்தினபுரி திருகோணமலை வவுனியா பொலன்னறுவை

இணையதள முகவரி:

சமூக ஊடகங்கள் / டிஜிட்டல் தளங்களில் உள்ள விபரங்கள்:

3.2 வணிகத் துறை

முதன்மை வணிகத் துறை: [பட்டியலிலிருந்து தெரிவு செய்யவும்]

- விவசாயம், வனவளம் மற்றும் மீன்பிடி
- உணவு மற்றும் பான உற்பத்தி
- உற்பத்தி மற்றும் பதப்படுத்துதல்
- நெசவுத் தொழில், ஆடை மற்றும் ஆடை அலங்காரத் துறை
- கைவினைப் பொருட்கள் மற்றும் படைப்பாக்கத் தொழில்கள்
- கட்டுமானம் மற்றும் கட்டிடச் சேவைகள்
- மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்
- தங்குமிடம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சேவைகள்
- உணவு மற்றும் பான சேவைகள்
- போக்குவரத்து மற்றும் தளபாடச் சேவைகள்
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள்
- தொலைத்தொடர்பு மற்றும் தொடர்பாடல்
- நிதி மற்றும் காப்புறுதிச் சேவைகள்
- தொழில்முறை, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பச் சேவைகள்
- கல்வி மற்றும் பயிற்சி
- சுகாதாரம் மற்றும் சமூகச் சேவைகள்
- தனிப்பட்ட மற்றும் ஏனைய சேவைகள்
- சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி
- ரியல் எஸ்டேட் மற்றும் சொத்துச் சேவைகள்
- கலை, பொழுதுபோக்கு மற்றும் ஓய்வுநேரச் (leisure) செயற்பாடுகள்
- ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்)

முதன்மை வணிகச் செயற்பாடு: [சுருக்கமான பதில்]

தொடர்புடைய ஏனைய துறைகள் / வணிகச் செயற்பாடுகள்: [விரிவான பதில் – விருப்பத்திற்குரியது]

3.3 வணிக விளக்கம்

உங்கள் வணிகத்தைச் சுருக்கமாக விளக்கவும். நீங்கள் விற்பனை செய்யும் அல்லது வழங்கும் தயாரிப்புகள் அல்லது சேவைகள், உங்கள் முக்கிய வாடிக்கையாளர்கள் யார், தற்போது எங்கு விற்பனை செய்கிறீர்கள் என்பவற்றை விளக்கவும். உங்கள் வணிகத்தின் முக்கிய அமைவிடம் அல்லது சேவை வழங்கும் பிரதேசத்தையும் குறிப்பிடவும். **[அதிகபட்சம் 500 சொற்கள்]**

---

04 | வணிக மாதிரி மற்றும் சந்தை

4.1 பிரச்சினை / வாய்ப்பு

உங்கள் வணிகம் வாடிக்கையாளர்களின் எந்தப் பிரச்சினையைத் தீர்க்கிறது அல்லது சந்தையின் எந்தத் தேவையைப் பூர்த்தி செய்கிறது?

யார் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள், அது ஏன் முக்கியமானது, மேலும் இது உங்கள் வணிகத்திற்கு எவ்வாறான வாய்ப்பை உருவாக்குகிறது என்பவற்றை விளக்கவும். **[அதிகபட்சம் 500 சொற்கள்]**

4.2 தயாரிப்புகள் மற்றும் சேவைகள்

உங்கள் முக்கிய தயாரிப்புகள் அல்லது சேவைகள் யாவை?

ஒவ்வொரு தயாரிப்பு அல்லது சேவையையும் சுருக்கமாக விவரித்து, அவை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் பயன்கள் மற்றும் பெறுமதிகளை விளக்கவும்.
[அதிகபட்சம் 500 சொற்கள்]

4.3 இலக்கு வாடிக்கையாளர்கள்

உங்கள் முக்கிய வாடிக்கையாளர்கள் அல்லது பயனாளர்கள் யார்?

நீங்கள் சேவையாற்றும் வாடிக்கையாளர் குழுக்களையும், அவர்களின் மிக முக்கியமான தேவைகளையும் விவரிக்கவும். **[அதிகபட்சம் 500 சொற்கள்]**

4.4 தற்போதைய சந்தைகள்

உங்கள் வணிகம் தற்போது எந்தெந்த சந்தைகளில் செயற்படுகிறது?

□ உள்ளூர் / மாவட்ட மட்டம் □ மாகாண மட்டம் □ தேசிய மட்டம்
□ பிராந்திய மட்டம் □ சர்வதேச சந்தை / ஏற்றுமதி

4.5 வருமான மாதிரி

உங்கள் வணிகம் எவ்வாறு வருமானத்தை ஈட்டுகிறது? வாடிக்கையாளர்கள் எவற்றுக்காகப் பணம் செலுத்துகிறார்கள், விலைகள் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன, மேலும் உங்கள் வணிகத்தின் முக்கிய வருமான மூலங்கள் எவை என்பவற்றை விவரிக்கவும். **[அதிகபட்சம் 500 சொற்கள்]**

4.6 போட்டி நிலைமை

உங்கள் முக்கிய போட்டியாளர்கள் யார், உங்கள் வணிகத்தை அவர்களிடமிருந்து வேறுபடுத்துவது எது? உங்கள் தயாரிப்புகள், சேவைகள், விலைகள், தரம், வாடிக்கையாளர் அனுபவம் அல்லது விநியோக முறைகள் ஆகியவற்றை உங்கள் போட்டியாளர்களுடன் ஒப்பிட்டு விளக்கவும். **[அதிகபட்சம் 400 சொற்கள்]**

4.7 சந்தைப்படுத்தல் உத்தி

தற்போது உங்கள் தயாரிப்புகள் அல்லது சேவைகளை எவ்வாறு சந்தைப்படுத்தி விற்பனை செய்கிறீர்கள்? உங்கள் வாடிக்கையாளர்களிடம் எவ்வாறு சென்றடைகிறீர்கள், புதிய வாடிக்கையாளர்களை எவ்வாறு ஈர்க்கின்றீர்கள் மற்றும் விற்பனையை எவ்வாறு அதிகரிக்கின்றீர்கள் என்பதை விபரிக்கவும். மேலும், புதிய வாடிக்கையாளர்களைச் சென்றடைய அல்லது புதிய சந்தைகளில் நுழைய நீங்கள் திட்டமிட்டுள்ள வழிமுறைகளையும் விளக்கவும்.

[அதிகபட்சம் 400 சொற்கள்]

05 | விண்ணப்பதாரர் பிரிவுக்கேற்ப உரிய தகவல்கள்

5A | வளர்ந்து வரும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (EMERGING SME)

நீங்கள் "Emerging SME" பிரிவைத் தெரிவு செய்திருந்தால் மட்டுமே இப்பகுதியைப் பூர்த்தி செய்யவும்.

5A.1 வணிகச் செயற்பாட்டு வரலாறு

வணிகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி:

பூர்த்தி செய்யப்பட்ட வணிகச் செயற்பாட்டு வருடங்களின் எண்ணிக்கை:

5A.2 வருடாந்த விற்பனை புரள்வு

கடந்த மூன்று நிதியாண்டுகளுக்கான விற்பனை புரள்வு விபரங்களை வழங்கவும்.

நிதியாண்டு	வருடாந்த விற்பனை புரள்வு (இலங்கை ரூபாயில்)
அண்மைய நிதியாண்டு (2025/2026)	
முந்தைய நிதியாண்டு (2024/2025)	
அதற்கு முந்தைய நிதியாண்டு (2023/2024)	

5A.3 நிதிசார் ஆதாரங்கள்

பின்வரும் ஆவணங்களைப் பதிவேற்றவும்:

- ☐ தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள்
- ☐ வருமான வரி அறிக்கை / தொடர்புடைய வரி ஆவணங்கள்
- ☐ ஏனைய ஆதார நிதி ஆவணங்கள்

5A.4 வேலைவாய்ப்பு

தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை:

கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை:

5A.5 வணிக வளர்ச்சி

கடந்த மூன்று ஆண்டுகளில் உங்கள் வணிகம் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது? வருமானம், வாடிக்கையாளர்கள், தயாரிப்புகள், சந்தைகள், ஊழியர்கள் அல்லது செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான மாற்றங்களை விவரிக்கவும். கிடைக்கக்கூடிய இடங்களில் புள்ளிவிபரங்களையும் சேர்க்கவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

5A.6 சான்றிதழ்கள், அங்கீகாரங்கள் மற்றும் உரிமங்கள்

உங்கள் வணிகம் தற்போது ஏதேனும் சான்றிதழ்கள், உரிமங்கள் அல்லது அங்கீகாரங்களைக் கொண்டுள்ளதா? மேலும், புதிய சான்றிதழ்கள், உரிமங்கள் அல்லது அங்கீகாரங்களைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளீர்களா?

ஆம் எனில், குறித்த சான்றிதழ்கள், உரிமங்கள் அல்லது அங்கீகாரங்களின் பெயர்கள், அவற்றை வழங்கிய நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை (பெறப்பட்டுள்ளது / விண்ணப்பிக்கப்பட்டுள்ளது) பற்றிய விபரங்களை வழங்கவும்.

தொடர்புடைய ஆவணங்களின் பிரதிகள் இருப்பின், அவற்றைத் தயவுசெய்து பதிவேற்றவும்.

5B | தொடக்கநிலை வணிகங்கள் (STARTUP)

நீங்கள் "Startup" பிரிவைத் தெரிவு செய்திருந்தால் மட்டுமே இப்பகுதியைப் பூர்த்தி செய்யவும்.

5B.1 தொடக்கநிலை வணிகத் தகவல்கள்

வணிகம் நிறுவப்பட்ட திகதி:

தயாரிப்பு / சேவை மேம்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி:

வணிக ரீதியான அறிமுகத் திகதி (பொருந்துமாயின்):

5B.2 தற்போதைய மேம்பாட்டு நிலை

□ **வணிக யோசனை பரிசோதிக்கப்பட்டுள்ளது (Idea Tested)** – உங்கள் வணிக யோசனை நடைமுறையில் சாத்தியமானதா என்பதை அறிய அதனைப் பரிசோதித்துள்ளீர்கள்.

□ **ஆரம்பநிலைத் தயாரிப்பு அல்லது சேவை உருவாக்கப்பட்டுள்ளது (Early Product or Service Developed)** – உங்கள் தயாரிப்பு அல்லது சேவையின் ஆரம்பநிலை வடிவத்தை உருவாக்கியுள்ளீர்கள்.

□ **முன்னோடிப் பரிசோதனை (Pilot Testing)** – குறைந்த எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுடன் உங்கள் தயாரிப்பு அல்லது சேவையைப் பரிசோதித்து வருகிறீர்கள்.

□ **சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது (Launched)** – உங்கள் தயாரிப்பு அல்லது சேவையை உத்தியோகபூர்வமாகச் சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளீர்கள்.

□ **வருமானம் ஈட்டப்படுகிறது (Earning Income)** – உங்கள் வணிகம் தற்போது விற்பனை மூலம் வருமானம் ஈட்டுகிறது.

□ **வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் நடைபெறுகிறது (Growing and Expanding)** – உங்கள் வணிகம் அதிக வாடிக்கையாளர்களைச் சென்றடைகிறது அல்லது அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்துகிறது.

5B.3 வணிக யோசனை அல்லது தயாரிப்பு மேம்பாடு

உங்கள் வணிக யோசனை அல்லது தயாரிப்பு / சேவையை விவரித்து, இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தை விளக்கவும். அதனை எவ்வாறு உருவாக்கினீர்கள் அல்லது பரிசோதித்தீர்கள், அதன் மூலம் என்ன கற்றுக்கொண்டீர்கள், மேலும் அது நடைமுறையில் வெற்றியடையக்கூடியது என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள் எவை என்பவற்றை விளக்கவும். **[அதிகபட்சம் 500 சொற்கள்]**

ஆதார ஆவணங்களைப் (Supporting Documents) பதிவேற்றவும்:

தயாரிப்பு / செயல்விளக்கம் / முன்மாதிரி (Prototype) இணைப்பு:

5B.4 காப்புரிமைகள், சான்றிதழ்கள் மற்றும் அங்கீகாரங்கள்

உங்கள் தொடக்க நிலை தொழில் நிறுவனத்திடம் ஏதேனும் காப்புரிமைகள், வணிகச் சின்னப் பதிவுகள், பதிப்புரிமைகள், தயாரிப்புச் சான்றிதழ்கள் அல்லது பிற அங்கீகாரங்கள் உள்ளனவா? இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளீர்களா?

ஆம் எனில், அவை தொடர்பான விபரங்களை வழங்குவதுடன், அவை தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா அல்லது விண்ணப்பச் செயன்முறையில் உள்ளனவா என்பதையும் குறிப்பிடவும்.

தொடர்புடைய ஆவணங்களின் பிரதிகள் இருப்பின், அவற்றைத் தயவுசெய்து பதிவேற்றவும்.

5B.5 சந்தை அங்கீகாரம்

வாடிக்கையாளர்களுக்கு உங்கள் தயாரிப்பு அல்லது சேவை தேவைப்படுகிறது அல்லது அதனை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதை நீங்கள் எவ்வாறு அறிந்துகொண்டீர்கள்? வாடிக்கையாளர் நேர்காணல்கள், கருத்துக்கணிப்புகள், முன்னோடிப் பரிசோதனைகள், முன்பதிவுகள், சந்தை ஆய்வுகள், பங்காளித்துவங்கள், விற்பனை அல்லது பயனாளர் கருத்துகள் மூலம் கிடைத்த ஆதாரங்களைச் சுருக்கமாக விளக்கவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

5B.6 வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனை
உங்கள் வணிகம் தொடர்பான பின்வரும் விபரங்களை வழங்கவும்:

- **தற்போதைய வாடிக்கையாளர்கள் அல்லது பயனாளர்களின் எண்ணிக்கை:** உங்கள் வணிகத்தில் தற்போது எத்தனை வாடிக்கையாளர்கள் அல்லது பயனாளர்கள் உள்ளனர்?
- **பணம் செலுத்தும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை:** உங்கள் தயாரிப்பு அல்லது சேவைக்காக தற்போது எத்தனை வாடிக்கையாளர்கள் பணம் செலுத்துகின்றனர்?
- **தற்போதைய வருமானம் (பொருந்துமாயின்):** விற்பனை மூலம் உங்கள் வணிகம் தற்போது எவ்வளவு வருமானம் ஈட்டுகிறது?

இதுவரை உங்கள் தொடக்கநிலை வணிகம் (Startup) எத்தகைய முன்னேற்றத்தை அடைந்துள்ளது? வாடிக்கையாளர்கள் அல்லது பயனாளர்கள், விற்பனை, முன்னோடித் திட்டங்கள், பங்காளித்துவங்கள், தயாரிப்பு மேம்பாடு, விருதுகள் அல்லது வணிகத்தின் மீதான ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஏனைய ஆதாரங்களைச் சேர்த்து விளக்கவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

5B.7 விரிவாக்கத் திறன்
தற்போதைய வாடிக்கையாளர்கள் அல்லது சந்தையைத் தாண்டி உங்கள் தொடக்கநிலை வணிகத்தை எவ்வாறு வளர்ப்பீர்கள்? நீங்கள் புதிதாக இணைக்கத் திட்டமிடும் வாடிக்கையாளர் குழுக்கள், இடங்கள், தயாரிப்புகள், விற்பனை வழிகள் அல்லது பங்காளித்துவங்கள் எவை என்பதையும், அதிகரிக்கும் தேவையை உங்கள் வணிகம் எவ்வாறு கையாளும் என்பதையும் விளக்கவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

5B.8 முந்தைய போட்டிகளில் பங்கேற்றமை

விண்ணப்பதாரர்கள் இதற்கு முன்னர் இதேபோன்ற தொடக்கநிலை வணிக அல்லது தொழில்முனைவோர் போட்டிகளில் பங்கேற்றிருக்கலாம் அல்லது தமது வணிக யோசனையை முன்வைத்திருக்கலாம். இருப்பினும், இத்தகைய போட்டிகளில் ஏதேனும் ஒன்றில் வெற்றிபெற்ற விண்ணப்பதாரர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

உங்கள் தொடக்கநிலை வணிகம் இதற்கு முன்னர் வேறொரு தொடக்கநிலை வணிக அல்லது தொழில்முனைவோர் போட்டியில் பங்கேற்றுள்ளதா அல்லது தனது வணிக யோசனையை முன்வைத்துள்ளதா?

☐ இல்லை
☐ ஆம்

ஆம் எனில், பின்வரும் விபரங்களை வழங்கவும்:

போட்டி / திட்டத்தின் பெயர்:
பங்கேற்ற ஆண்டு:
அடைந்த நிலை:
□ பங்கேற்றவர் □ குறுகிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்டவர் / இறுதிப் போட்டியாளர்
□ வெற்றியாளர் / விருது பெற்றவர் □ ஏனையவை: _____

ஆம் எனில், அதன் முடிவு என்ன? அடைந்த நிலை, பெற்ற விருது அல்லது ஏனைய பெறுபேறுகளைச் சுருக்கமாகக் குறிப்பிடவும்.

06| புத்தாக்கம் மற்றும் தனித்துவம்

இத்திட்டத்தின் மதிப்பீட்டுக் கட்டமைப்பில் மிக அதிகமான மதிப்பெண் பங்கு புத்தாக்கம் மற்றும் தனித்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

6.1 புத்தாக்கம்

உங்கள் வணிகத்தில் காணப்படும் புத்தாக்க அம்சம் என்ன? புதிய அல்லது மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு, சேவை, தொழில்நுட்பம், செயன்முறை, வணிக மாதிரி அல்லது சந்தை அணுகுமுறை பற்றியும், அதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் பற்றியும் விளக்கவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

6.2 புத்தாக்கத்தின் வகை

பொருந்தும் அனைத்தையும் தெரிவு செய்யவும்.

□ தயாரிப்புப் புத்தாக்கம் □ சேவைப் புத்தாக்கம்
□ தொழில்நுட்பப் புத்தாக்கம் □ செயன்முறைப் புத்தாக்கம்
□ வணிக மாதிரிப் புத்தாக்கம் □ சந்தைப் புத்தாக்கம்
□ ஏனையவை: _____

6.3 வேறுபடுத்திக் காட்டும் அம்சங்கள்

தற்போதுள்ள மாற்றுத் தயாரிப்புகள் அல்லது சேவைகளிலிருந்து உங்கள் தயாரிப்பு அல்லது சேவை எவ்வாறு வேறுபடுகிறது?
வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் தெளிவான நன்மைகளை மையமாகக் கொண்டு விளக்கவும். சாத்தியமான இடங்களில் ஆதாரங்களையும் இணைக்கவும்.
[அதிகபட்சம் 300 சொற்கள்]

6.4 போட்டித்திறன் முன்னிலை

உங்கள் வணிகம் வளர்ச்சியடையும் போது தொடர்ந்து போட்டித்திறனுடன் விளங்குவதற்கு எவை உதவும்? உங்கள் நிபுணத்துவம், தொழில்நுட்பம், அறிவுசார் சொத்துரிமை, பங்காளித்துவங்கள், வாடிக்கையாளர் விசுவாசம், செலவுத் திறன் அல்லது சந்தைகளை அணுகும் வாய்ப்பு போன்ற உங்கள் வலுவான முன்னிலைகளை விவரிக்கவும். **[அதிகபட்சம் 250 சொற்கள்]**

6.5 புத்தாக்கத்திற்கான ஆதாரங்கள் பொருந்துமாயின், புத்தாக்கத்தை நிரூபிக்கும் ஆதார ஆவணங்களைப் பதிவேற்றவும்.

07 | தொழில்முனைவோர் திறன்

7.1 தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம்

இந்த வணிகத்தை வளர்ப்பதற்கு நீங்களும் உங்கள் குழுவினரும் ஏன் மிகவும் பொருத்தமானவர்களாக இருக்கிறீர்கள்? நிறுவனர்(கள்) மற்றும் முக்கிய குழு உறுப்பினர்களின் தொடர்புடைய திறன்கள், அனுபவங்கள், பொறுப்புகள் மற்றும் பலம் ஆகியவற்றைச் சுருக்கமாக விளக்கவும். [அதிகபட்சம் 250 சொற்கள்]

7.2 முக்கிய சாதனைகள்

இதுவரை உங்கள் வணிகம் அடைந்துள்ள மிக முக்கியமான மூன்று சாதனைகள் யாவை?

சாதனை 1:
சாதனை 2:
சாதனை 3:

7.3 வணிகச் சவால்

நீங்கள் எதிர்கொண்ட ஒரு முக்கியமான வணிகச் சவாலையும் அதனை எவ்வாறு கையாண்டீர்கள் என்பதையும் விவரிக்கவும். நீங்கள் எடுத்த நடவடிக்கைகள், அதன் மூலம் கிடைத்த முடிவுகள் மற்றும் அதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட விடயங்கள் ஆகியவற்றை விளக்கவும். [அதிகபட்சம் 300 சொற்கள்]

7.4 திறன் இடைவெளிகள்

உங்கள் வணிகம் எந்தத் திறன்கள் அல்லது ஆற்றல்களை அதிகளவில் மேம்படுத்த வேண்டியுள்ளது? இந்தத் துறைகளில் திறன்களை மேம்படுத்துவது உங்கள் வளர்ச்சித் திட்டங்களை அடைவதற்கு எவ்வாறு உதவும் என்பதை விளக்கவும். **[**அதிகபட்சம் 300 சொற்கள்]

08 | வணிக விரிவாக்கத் திறன் மற்றும் வளர்ச்சி

8.1 வணிக வளர்ச்சி இலக்குகள்

அடுத்த மூன்று ஆண்டுகளில் உங்கள் வணிகம் எத்தகைய இலக்குகளை அடைய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்? வருமானம், வாடிக்கையாளர்கள், வேலைவாய்ப்புகள், தயாரிப்புகள், சந்தைகள் அல்லது உற்பத்தித் திறன் தொடர்பான அளவிடக்கூடிய இலக்குகளை வழங்கவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

8.2 விரிவாக்கத் துறைகள்

அடுத்த மூன்று ஆண்டுகளில் பின்வரும் எந்தெந்த துறைகளில் உங்கள் வணிகத்தை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளீர்கள்? பொருந்தும் அனைத்தையும் தெரிவு செய்யவும்.

- □ புதிய உள்நாட்டுச் சந்தைகள்
- □ புதிய தயாரிப்புகள் / சேவைகள்
- □ ஏற்றுமதி விரிவாக்கம்
- □ உற்பத்தி / செயற்பாட்டுத் திறன் விரிவாக்கம்
- □ புதிய வாடிக்கையாளர் பிரிவுகள்
- □ பிராந்திய ரீதியான விரிவாக்கம்
- □ டிஜிட்டல் விரிவாக்கம்
- □ ஏனையவை: _____

8.3 வளர்ச்சி உத்தி (Growth Strategy)

இந்த மூன்று ஆண்டு இலக்குகளை நீங்கள் எவ்வாறு அடைவீர்கள்? விற்பனை, வாடிக்கையாளர்கள், சந்தைகள் அல்லது வணிகச் செயற்பாடுகளை வளர்ப்பதற்காக நீங்கள் மேற்கொள்ளவுள்ள முக்கிய நடவடிக்கைகள், பயன்படுத்தவுள்ள வளங்கள், உருவாக்கவுள்ள பங்காளித்துவங்கள் மற்றும் அவற்றைச் செயற்படுத்துவதற்கான கால அட்டவணை ஆகியவற்றை விவரிக்கவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

8.4 வருமான முன்னறிவிப்பு (Revenue Projection)

ஆண்டு	எதிர்பார்க்கப்படும் வருமானம் (இலங்கை ரூபாயில்)
முதலாம் ஆண்டு (Year 1)	
இரண்டாம் ஆண்டு (Year 2)	
மூன்றாம் ஆண்டு (Year 3)	

8.5 ஏற்றுமதிச் சாத்தியக்கூறுகள்

உங்கள் வணிகம் தற்போது ஏற்றுமதி செய்கிறதா அல்லது ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளதா?

□ தற்போது ஏற்றுமதி செய்கிறது

□ ஏற்றுமதிக்குத் தயாராக உள்ளது

□ எதிர்காலத்தில் ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன
□ பொருந்தாது

பொருந்துமாயின், உங்கள் வணிகத்திற்கான ஏற்றுமதி வாய்ப்பு என்ன?
இலக்கு நாடுகள் அல்லது வாடிக்கையாளர் குழுக்கள், எதிர்பார்க்கப்படும் சந்தைத் தேவை, ஏற்றுமதிக்கான தயார்நிலை மற்றும் அடுத்ததாக நீங்கள் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் ஆகியவற்றைக் குறிப்பிடவும். [அதிகபட்சம் 300 சொற்கள்]

09 | நிலைத்தன்மை மற்றும் பசுமை நடைமுறைகள் (Green Practices)

9.1 தற்போதைய நடைமுறைகள்

உங்கள் வணிகம் தற்போது பின்பற்றும் சுற்றுச்சூழல் நடைமுறைகள் யாவை?
குறிப்பிட்ட உதாரணங்களை வழங்கவும். சாத்தியமான இடங்களில், மின்சாரப் பயன்பாடு, நீர்ப் பயன்பாடு, கழிவுகள், பசுமைக்குடில் வாயு வெளியேற்றம் அல்லது பொதியிடல் ஆகியவற்றைக் குறைப்பதன் மூலம் கிடைத்த அளவிடக்கூடிய பெறுபேறுகளையும் குறிப்பிடவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

9.2 பசுமை நடைமுறைகள்

பொருந்தும் அனைத்தையும் தெரிவு செய்யவும்.

□ சக்தி வினைத்திறன் மேம்பாடு
□ புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி பயன்பாடு
□ மறுசுழற்சி / சுற்றுச் சுழற்சிப் பொருளாதாரம்
□ கழிவுகளைக் குறைத்தல்
□ நிலையான மூலப்பொருள் கொள்வனவு
□ நீர் வினைத்திறன் மேம்பாடு
□ குறைந்த காபன் வெளியேற்ற நடைமுறைகள்
□ சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான தயாரிப்புகள் / சேவைகள்
□ ஏனையவை: _____

9.3 எதிர்காலத் திட்டங்கள்

உங்கள் வணிகம் வளர்ச்சியடையும் போது அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ள சுற்றுச்சூழல் மேம்பாடுகள் யாவை? மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள், எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் மற்றும் அவற்றைச் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ள காலப்பகுதி ஆகியவற்றைக் குறிப்பிடவும். [அதிகபட்சம் 300 சொற்கள்]

---

10 | பொருளாதார மற்றும் சமூகத் தாக்கம்

மதிப்பீட்டில் வழங்கப்படும் பங்கு: 5%

10.1 தற்போதைய வேலைவாய்ப்பு

மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை: [எண்ணிக்கை]

பெண் ஊழியர்களின் எண்ணிக்கை: [எண்ணிக்கை]

இளைஞர் ஊழியர்களின் எண்ணிக்கை: [எண்ணிக்கை]

மாற்றுத்திறனாளி ஊழியர்களின் எண்ணிக்கை (PwDs): [எண்ணிக்கை]

10.2 எதிர்கால வேலைவாய்ப்பு

அடுத்த மூன்று ஆண்டுகளில் உங்கள் வணிகத்தின் மூலம் எத்தனை புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளீர்கள்? [எண்ணிக்கையைக் குறிப்பிடவும்]

10.3 பிராந்தியப் பங்களிப்பு

உங்கள் வணிகம் உள்ளூர் பொருளாதாரத்திற்கு அல்லது சமூகத்திற்கு எவ்வாறு நன்மை அளிக்கிறது? உள்ளூர் வேலைவாய்ப்புகள் உருவாக்கம், உள்ளூர் கொள்வனவு, திறன் மேம்பாடு, சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகரித்தல் அல்லது சமூகக் குழுக்களுக்கு ஆதரவளித்தல் போன்ற உதாரணங்களை வழங்கவும். [அதிகபட்சம் 300 சொற்கள்]

---

11 | சிறப்பு அங்கீகாரம்

வளர்ந்து வரும் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (Emerging SME) மற்றும் தொடக்கநிலை வணிகங்கள் (Startup) ஆகிய இரு பிரிவுகளிலும் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் சிறப்பு அங்கீகாரப் பிரிவுகளுக்குப் பரிசீலிக்கப்படலாம்.

11.1 பெண் தொழில்முனைவோர்

பெண் தொழில்முனைவோருக்கான சிறப்பு அங்கீகாரத்திற்காகப் பரிசீலிக்கப்பட விரும்புகிறீர்களா?

□ ஆம்

□ இல்லை

ஆம் எனில், இவ்வங்கீகாரத்திற்கான உங்கள் தகுதியை உறுதிப்படுத்தும் தொடர்புடைய தகவல்களை வழங்கவும்.

[விரிவான பதில் / ஆதார ஆவணங்கள்]

11.2 இளம் தொழில்முனைவோர்

இளம் தொழில்முனைவோருக்கான சிறப்பு அங்கீகாரத்திற்காகப் பரிசீலிக்கப்பட விரும்புகிறீர்களா?

□ ஆம்
□ இல்லை
ஆம் எனில், இவ்வங்கீகாரத்திற்கான உங்கள் தகுதியை உறுதிப்படுத்தும் தொடர்புடைய தகவல்களை வழங்கவும்.
[விரிவான பதில் / ஆதார ஆவணங்கள்]

---

12 | நிதி உதவிக்கான தேவை

இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு வெற்றியாளருக்கும் **இலங்கை ரூபாய் 1 மில்லியன் முதல் 5 மில்லியன் வரை** நிதி உதவி வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. வணிகத் தேவைகள், வளர்ச்சி நிலை, வளர்ச்சி நோக்கங்கள், எதிர்பார்க்கப்படும் தாக்கம், வணிகத் திட்டம் மற்றும் நிதியைப் பயன்படுத்துவதற்கான தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இறுதி நிதி ஒதுக்கீடு தீர்மானிக்கப்படும்.

12.1 கோரப்படும் நிதி உதவி

கோரப்படும் தொகை:

இலங்கை ரூபாய் [_____]

குறைந்தபட்சம் : ரூபாய் 1,000,000

அதிகபட்சம் : ரூபாய் 5,000,000

12.2 நிதியைப் பயன்படுத்துவதற்கான முன்மொழிவு

நிதி ஒதுக்கீட்டுப் பிரிவு	தொகை (இலங்கை ரூபாயில்)	சதவீதம் (%)
தயாரிப்பு / சேவை மேம்பாடு		
தொழில்நுட்பம் / உபகரணங்கள்		
சந்தை விரிவாக்கம்		
மனித வளங்கள்		
செயற்பாட்டு மூலதனம்		
ஏற்றுமதி மேம்பாடு		
ஏனையவை		
மொத்தம்		**100%**

12.3 நிதி உதவிக்கான நியாயப்படுத்தல்

உங்களுக்கு இந்த நிதி ஏன் தேவைப்படுகிறது, மேலும் இது உங்கள் வணிக வளர்ச்சிக்கு எவ்வாறு உதவும்? கோரப்படும் நிதித் தொகையை நிதி ஒதுக்கீட்டு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி, ஒவ்வொரு செலவும் ஏன் அவசியமானது என்பதை விளக்கவும். [அதிகபட்சம் 500 சொற்கள்]

12.4 எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்

இந்த நிதி உதவியின் மூலம் அளவிடக்கூடிய வகையில் எத்தகைய பெறுபேறுகளை அடைய எதிர்பார்க்கிறீர்கள்? வருமான வளர்ச்சி, புதிய வாடிக்கையாளர்கள், வேலைவாய்ப்புகள், உற்பத்தித் திறன் அதிகரிப்பு, புதிய சந்தைகளில் பிரவேசித்தல், தயாரிப்பு அறிமுகம் அல்லது சுற்றுச்சூழல் நன்மைகள் போன்ற இலக்குகளை உள்ளடக்கவும். [விரிவான பதில்]

12.5 மைல்கல் திட்டம்

மைல்கல்	எதிர்பார்க்கப்படும் நிறைவு காலம்	எதிர்பார்க்கப்படும் பெறுபேறு
மைல்கல் 1		
மைல்கல் 2		
மைல்கல் 3		

13 | வழிகாட்டல் மற்றும் வணிக ஆதரவு

JXG மற்றும் CCC நிறுவனங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் வழிகாட்டுநர்களின் ஆதரவுடன், கட்டமைக்கப்பட்ட 12 மாத வழிகாட்டல் மற்றும் கண்காணிப்புத் திட்டத்தைச் செயற்படுத்த இத்திட்டம் முன்மொழிகிறது.

13.1 முன்னுரிமை ஆதரவுத் துறைகள்

அதிகபட்சம் ஐந்து துறைகளைத் தெரிவு செய்யவும்.

- ☐ வணிக உத்தித் திட்டமிடல்
- ☐ சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தகச் சின்ன மேம்பாடு
- ☐ நிதித் திட்டமிடல்
- ☐ மனித வள முகாமைத்துவம்
- ☐ தகவல் தொழில்நுட்பம்
- ☐ முதலீட்டைப் பெறுவதற்கான தயார்நிலை
- ☐ சந்தை அணுகல்
- ☐ ஏற்றுமதி மேம்பாடு
- ☐ வங்கிச் சேவைகள் மற்றும் நிதி
- ☐ காப்புறுதி
- ☐ நிறுவன ஆளுகை
- ☐ நிலைத்தன்மை
- ☐ ஏனையவை: _____

13.2 முக்கிய வழிகாட்டல் தேவைகள்

உங்களுக்கு வழிகாட்டல் அல்லது வணிக ஆலோசனை தேவைப்படும் மிக முக்கியமான மூன்று துறைகள் யாவை?
கீழே உள்ள ஒவ்வொரு இடத்திலும் ஒரு தெளிவான தேவையைக் குறிப்பிடவும்.

1. _____
2. _____
3. _____

13.3 மூலோபாயத் தொடர்புகள்

உங்கள் வணிக வளர்ச்சிக்கு மிகவும் உதவக்கூடிய பங்காளித்துவங்கள், வலையமைப்புகள் அல்லது வணிகத் தொடர்புகள் எவை?
நீங்கள் யாருடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்கள், மேலும் அத்தொடர்புகள் உங்கள் வணிக வளர்ச்சிக்கு எவ்வாறு ஆதரவளிக்கும் என்பதையும் விளக்கவும். **[அதிகபட்சம் 250 சொற்கள்]**

14. ஆதார ஆவணங்கள்

தயவுசெய்து தொடர்புடைய ஆதார ஆவணங்களைப் பதிவேற்றவும்.

1. அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் கட்டாயமான ஆவணங்கள்

- **☐ நிறுவுநர் / முகாமைத்துவக் குழுவின் விவரக்கோவை**
- **☐ தயாரிப்பு / சேவை தொடர்பான தகவல்கள்**
- **☐ ஏனைய தொடர்புடைய ஆதார ஆவணங்கள்**

2. கூடுதல் ஆவணங்கள் – ஏற்கனவே நிறுவப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு

- **☐ வணிகப் பதிவுச் சான்றிதழ்**
- **☐ தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கைகள்**
- **☐ வருமான வரி அறிக்கை / தொடர்புடைய வரி ஆவணங்கள்**
- **☐ குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகால வணிகச் செயற்பாட்டு வரலாற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்**
- **☐ ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள், ஒழுங்குமுறை அங்கீகாரங்கள் மற்றும் வணிகச் செயற்பாட்டு உரிமங்களின் பிரதிகள்**
- **☐ நிலுவையில் உள்ள சான்றிதழ்கள், அங்கீகாரங்கள் அல்லது உரிமங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான ஆதாரங்கள் (பொருந்துமிடத்து)**

3. கூடுதல் ஆவணங்கள் – புத்தொழில் நிறுவனங்களுக்கு

- **☐ கருத்தாக்கத்தின் சாத்தியக்கூறுகளை நிரூபிக்கும் ஆதாரம் (Proof of Concept – PoC) / குறைந்தபட்ச செயல்திறன் கொண்ட தயாரிப்பு (Minimum Viable Product – MVP)**
- **☐ முன்மாதிரி அல்லது தயாரிப்பு / சேவை செயல்விளக்கம்**
- **☐ தயாரிப்பு அல்லது சேவை மீதான வாடிக்கையாளர் ஆர்வத்தை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள்**
- **☐ தற்போதுள்ள வாடிக்கையாளர்கள் அல்லது மேற்கொள்ளப்பட்ட விற்பனையை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள்**
- **☐ காப்புரிமைகள், வணிகச் சின்னப் பதிவுகள், பதிப்புரிமைகள், தயாரிப்புச் சான்றிதழ்கள் அல்லது ஒழுங்குமுறை அங்கீகாரங்களின் பிரதிகள் (பொருந்துமிடத்து)**
- **☐ நிலுவையில் உள்ள காப்புரிமைகள், பதிவுகள், சான்றிதழ்கள் அல்லது அங்கீகாரங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான ஆதாரங்கள் (பொருந்துமிடத்து)**

4. விருப்பத்திற்குரிய ஆதரவு ஆவணங்கள்

- **☐ சந்தைப்படுத்தல் திட்டங்கள், விளம்பரப் பொருட்கள் அல்லது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான ஏனைய ஆதாரங்கள்**
- **☐ விருதுகள் / அங்கீகாரங்கள்**
- **☐ வாடிக்கையாளர் கருத்துரைகள் / பரிந்துரைகள்**
- **☐ கூட்டாண்மை ஒப்பந்தங்கள்**

- **☐ ஏற்றுமதி தொடர்பான ஆவணங்கள்**
- **☐ ஏனைய ஆதரவு ஆவணங்கள்**

15| இறுதி உறுதிமொழி மற்றும் ஒப்புதல்

விண்ணப்பதாரரின் உறுதிமொழி
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதன் மூலம், நான் / நாங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகிறேன் / உறுதிப்படுத்துகிறோம்:

☐ இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது / எமது அறிவுக்கு எட்டியவரை **உண்மையானவை, துல்லியமானவை மற்றும் முழுமையானவை** என்பதை உறுதிப்படுத்துகிறேன் / உறுதிப்படுத்துகிறோம்.

☐ தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் பிரிவுக்குப் பொருந்தும் தகுதித் தேவைகளை வணிகம் பூர்த்தி செய்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறேன் / உறுதிப்படுத்துகிறோம்.

☐ தகுதியைத் தீர்மானிப்பதற்கும் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்வதற்கும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஆதார ஆவணங்கள் **சரிபார்க்கப்படலாம்** என்பதைப் புரிந்துகொள்கிறேன் / புரிந்துகொள்கிறோம்.

☐ தேசிய தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் நிர்வாகம், தகுதி மதிப்பீடு, விண்ணப்ப மதிப்பீடு மற்றும் திட்டச் செயற்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்களை **சேகரிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், செயலாக்குவதற்கும்** எனது / எமது ஒப்புதலை வழங்குகிறேன் / வழங்குகிறோம்.

☐ திட்டத்தின் நிர்வாகம் மற்றும் செயற்படுத்தலில் நேரடியாக ஈடுபடும் **அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பணியாளர்கள், மதிப்பீட்டாளர்கள், நடுவர்கள், வழிகாட்டுநர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினரால்** திட்டம் தொடர்பான நோக்கங்களுக்காக மட்டுமே எனது / எமது விண்ணப்பம் பரிசீலிக்கப்படலாம் என்பதைப் புரிந்துகொள்கிறேன் / புரிந்துகொள்கிறோம்.

☐ சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் **இரகசியமான திட்டத் தகவல்களாக** கையாளப்படும் என்பதையும், பொருந்தக்கூடிய சட்டத்தின்படி வெளிப்படுத்துவது கட்டாயமானதாக அல்லது அனுமதிக்கப்பட்டதாக இல்லாவிடில், ஒப்புதல் இன்றி தொடர்பற்ற மூன்றாம் தரப்பினருக்கு அவை வெளிப்படுத்தப்படமாட்டாது அல்லது திட்டத்திற்கு வெளியான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படமாட்டாது என்பதையும் புரிந்துகொள்கிறேன் / புரிந்துகொள்கிறோம்.

☐ விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பது மட்டுமே குறுகிய பட்டியலில் இடம்பெறுதல், தெரிவு செய்யப்படுதல் அல்லது நிதி உதவி பெறுதல் ஆகியவற்றுக்கு **உத்தரவாதம் அளிக்காது** என்பதைப் புரிந்துகொள்கிறேன் / புரிந்துகொள்கிறோம்.

☐ குறுகிய பட்டியலில் தெரிவு செய்யப்பட்டால், திட்டத்தின் மதிப்பீடு, வணிக முன்வைப்பு (Pitching) மற்றும் தொடர்புடைய ஏனைய செயற்பாடுகளில் பங்கேற்க ஒப்புக்கொள்கிறேன் / ஒப்புக்கொள்கிறோம்.

☐ தெரிவு செய்யப்பட்டால், திட்டத்திற்குப் பொருந்தும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கச் செயற்பட ஒப்புக்கொள்கிறேன் / ஒப்புக்கொள்கிறோம்.

□ நிதி உதவி வழங்கப்பட்ட பின்னரான காலப்பகுதியில், கண்காணிப்பு, வழிகாட்டல் மற்றும் திட்டத்தின் தாக்கம் தொடர்பான அறிக்கையிடல் ஆகியவற்றுக்காகத் தெரிவு செய்யப்பட்ட வணிகங்கள் மேலதிக தகவல்களை வழங்க வேண்டியிருக்கலாம் என்பதைப் புரிந்துகொள்கிறேன் / புரிந்துகொள்கிறோம்.

சமர்ப்பிப்பதற்கான ஒப்புதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், தகுதித் தேவைகள், உறுதிமொழி மற்றும் ஒப்புதல் நிபந்தனைகளை நான் / நாங்கள் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன் / விளங்கிக்கொண்டுள்ளோம். தேசிய தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், செயலாக்குவதற்கும் எனது / எமது விருப்பத்துடன் கூடிய ஒப்புதலை வழங்குகிறேன் / வழங்குகிறோம்.

□ நான் / நாங்கள் ஏற்றுக்கொண்டு ஒப்புதல் வழங்குகிறேன் / வழங்குகிறோம்.

விண்ணப்பதாரரின் பெயர்:

வணிக நிறுவனத்தின் பெயர்:

பதவி:

திகதி:

மின்னணுக் கையொப்பம் / உறுதிப்படுத்தல்:

---

16 | விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல்

இறுதிச் சரிபார்ப்புப் பட்டியல்

உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன், பின்வருவனவற்றை உறுதிப்படுத்தவும்:

□ நான் சரியான விண்ணப்பதாரர் வகையைத் தேர்ந்தெடுத்துள்ளேன்.

□ பொருந்தக்கூடிய தகுதித் தேவைகளை நான் பூர்த்தி செய்கிறேன்.

□ கட்டாயமாகப் பதிலளிக்க வேண்டிய அனைத்து வினாக்களுக்கும் நான் பதிலளித்துள்ளேன்.

□ வணிகம் மற்றும் நிதி தொடர்பான துல்லியமான தகவல்களை வழங்கியுள்ளேன்.

□ தேவையான ஆதார ஆவணங்களைப் பதிவேற்றியுள்ளேன்.

□ புத்தாக்கம், வளர்ச்சி, நிலைத்தன்மை மற்றும் தாக்கம் தொடர்பான பிரிவுகளைப் பூர்த்தி செய்துள்ளேன்.

□ நிதித் தேவைகள் தொடர்பான பிரிவைப் பூர்த்தி செய்துள்ளேன்.

□ எனது விண்ணப்பத்தையும் ஆதார ஆவணங்களையும் மீளாய்வு செய்துள்ளேன்.

□ அறிவிப்பு மற்றும் ஒப்புதல் தொடர்பான விதிமுறைகளைப் படித்து ஏற்றுக்கொண்டுள்ளேன்.